Reg. No. 0 1 2 4 1 8

# மேல்நிலை இரண்டாமாண்டு காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் – 2017

நேரம் : 3 மணி ] வரலாறு [மொத்த மதிப்பெண்கள் : 200

அறிவுரை : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டும் எழுதுவதற்கு அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தலாம்.

## பகுதி–அ

45 × 1=45

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண்

I. சரியான விடையை தேர்வு செய்க.

1. பிளாசிப்போர் நடைபெற்ற ஆண்டு அ) 1787 ஆ) 1764 இ) 1772 ஈ) 1757
2. காரன்வாலிஸ் பிரபு அறிமுகப்படுத்தியது அ) மகல்வாரி முறை
ஆ) நிலையான நிலவரித்திட்டம் இ) இரயத்துவாரி முறை ஈ) ஜாகிர்தாரி முறை
3. 1798ல் வெல்லெஸ்லி பிரபுவின் துணைப்படைத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட முதல் நாடு
அ) அயோத்தி ஆ) தஞ்சாவூர் இ) சூரத் ஈ) ஹைதராபாத்
4. ஹேஸ்டிங்ஸ் பிரபு நேபாளத்தின் மீது போர் தொடுத்த ஆண்டு அ) 1814 ஆ) 1815 இ) 1816 ஈ) 1817
5. இந்தியாவில் ஆங்கிலம் ஆட்சிமொழியாக ஏற்கப்பட்ட ஆண்டு அ) 1833 ஆ) 1835 இ) 1837 ஈ) 1839
6. எந்த மாகாண ஆட்சிக்கு லாரன்ஸ் சகோதரர்கள் சேவையாற்றினார்கள் ?
அ) பர்மா ஆ) பஞ்சாப் இ) வங்காளம் ஈ) மைசூர்
7. ஜோனாதன் டங்கன் வடமொழிக் கல்லூரியை நிறுவிய இடம்
அ) சென்னை ஆ) பம்பாய் இ) கல்கத்தா ஈ) பனாரஸ்
8. நெல்கட்டும் செவல் பகுதியைக் கைப்பற்றியவர்
அ) கர்னல் ஹெரான் ஆ) கர்னல் கேம்ப்பெல் இ) காலின் ஜாக்சன் ஈ) புலித்தேவர்
9. பின்வருவனவற்றுள் வேலூர் கலகத்திற்கான காரணம் எது ? அ) வாரிசு இழக்கும் கொள்கை
ஆ) கப்பம் வசூலித்தல் இ) புதிய ஆயுதங்களையும் சீருடைகளையும் அறிமுகப்படுத்தியது
ஈ) பிரிட்டிஷ் ஆட்சியின் பொருளாதாரச் சுரண்டல்
10. பின்வருபவர்களில் 1857ஆம் ஆண்டு கலகத்தை முதல் இந்திய விடுதலைப் போர் என்று கருதியவர்
அ) சர் ஜான் மார்ஷல் ஆ) வீரசவார்க்கர் இ) எஸ்.என்.சென் ஈ) ஆர்.சி.மஜூம்தார்
11. இந்தியாவின் முதல் வைஸ்ராய் அ) வாரன்ஹேஸ்டிங்ஸ் ஆ) டல்ஹவுசி பிரபு இ) கானிங் பிரபு ஈ) ரிப்பன் பிரபு
12. சமய ஞான சபை நிறுவப்பட்ட இடம் அ) மதுரை ஆ) இராமேஸ்வரம் இ) வடலூர் ஈ) சிதம்பரம்
13. இந்திய தேசிய காங்கிரசை தோற்றுவித்தவர்
அ) W.C.பானர்ஜி ஆ) A.O.ஹியூம் இ) மகாத்மா காந்தி ஈ) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்
14. பின்வருவனவற்றுள் தீவிரவாதம் தோன்றுவதற்கான காரணம் இல்லாதது எது ?அ) இல்பர்ட் மசோதா
ஆ) கல்கத்தா மாநகராட்சி சட்டம் இ) பல்கலைக்கழகங்கள் சட்டம் ஈ) வங்கப்பிரிவினை
15. கேடா சத்தியாகிரகத்தை காந்தி யாரை ஆதரிப்பதற்காக தொடங்கினார் ? அ) அவுரி பண்ணையாளர்கள்
ஆ) ஆலைத் தொழிலாளர்கள் இ) குடியானவர்கள் ஈ) தொழிற்சாலைப் பணியாளர்கள்
16. வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்திற்கு தலைமையேற்றவர்
அ) காந்தி ஆ) ராஜாஜி இ) வ.உ.சி. ஈ) காமராஜ்
17. தென்னிந்திய நல உரிமை சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு அ) 1912 ஆ) 1914 இ) 1916 ஈ) 1917
18. பின்வருவனவற்றுள் 1858-ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின் சாரத்து எது ?
அ) இயக்குநர்கள் மன்றம் மற்றும் கட்டுப்பாட்டு வாரியம் உருவாக்கப்பட்டன
ஆ) வணிகக் குழுவின் ஆட்சி 20 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது
இ) 15 உறுப்பினர்கள் கொண்ட இந்திய கவுன்சில் அமைக்கப்பட்டது
ஈ) முன்பு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் யாவும் ரத்து செய்யப்பட்டன.
19. சுதந்திர இந்தியாவின் காங்கிரஸ் அல்லாத முதல் அமைச்சரவைக்கு தலைமையேற்றவர்
அ) வி.பி. சிங் ஆ) நரசிம்மராவ் இ) மொரார்ஜி தேசாய் ஈ) ஏ.பி.வாஜ்பாய்
20. முதலாவது இந்திய தொழில்நுட்பக் கழகம் தொடங்கப்பட்ட இடம்
அ) கான்பூர் ஆ) பம்பாய் இ) சென்னை ஈ) கோரக்பூர்

II.பின்வரும் வாக்கியங்களில் உள்ள கோடிட்ட இடங்களை சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக.

21. மைசூர் மீது படையெடுத்த சென்னை ஆளுநர் --------.
22. வேலூர் சிப்பாய் கலகம் தோன்றிய ஆண்டு --------.
23. ஹிடாகாரினி சபையை அமைத்தவர் -------.
24. வேலூர் கோட்டையின் இராணுவத் தளபதி --------.
25. பேரரசியின் அறிக்கையை கானிங் பிரபு ------ என்னுமிடத்தில் படித்தார்.
26. இந்திய தேசிய காங்கிரஸ் முதல் மாநாடு நடைபெற்ற இடம் ------.
27. சூரத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் பிளவுபட்ட ஆண்டு --------.
28. முழு சுதந்திரம் பற்றிய தீர்மானம் இயற்றப்பட்ட இடம் -----.
29. சென்னை சுதேசி சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு ------.
30. மண்டல் குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்தப்பட்ட முடிவு செய்த இந்திய பிரதமர் ---

III. நிரல் அ – வின் கீழ் உள்ளவற்றை நிரல்– ஆ உடன் பொருத்துக.

| | அ | | | ஆ |
|---|---|---|---|---|
| 31. | சரபோஜி | - | அ) | சுதேசமித்திரன் |
| 32. | டல்ஹவுசி | - | ஆ) | ஆத்மிய சபை |
| 33. | கர்சன் பிரபு | - | இ | தஞ்சாவூர் |
| 34. | இராஜாராம் மோகன்ராய் | - | ஈ) | பாபாதயாள் |
| 35. | நிரங்காரி இயக்கம் | - | உ) | பஞ்சாப் |

IV. சரியான குறிப்பை கண்டறிக. (ஒன்று மட்டுமே சரியானது)

36. அ) வாரன்ஹேஸ்டிங்ஸ் 1774ல் வில்லியம் கோட்டையின் ஆளுநராக பதவியேற்றார்
ஆ) வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆட்சிக் காலத்தில் ரோகில்லா போர் நடைபெற்றது
இ) ஒழுங்கு முறை சட்டத்தின்படி இயக்குநர்கள் மன்றத்தின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும்
ஈ) ராஜா ஜெயித்சிங் அயோத்தியின் ஆட்சியாளர்
37. அ) ஹேஸ்டிங்ஸ் பிரபு தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினார்
ஆ) 1815ல் சகௌலி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது
இ) பிண்டாரிகள் சீக்கிய இனத்தைச் சேர்ந்தவர்கள்
ஈ) கல்கத்தா இந்து கல்லூரியை ஹேஸ்டிங்ஸ் பிரபு ஆதரித்தார்

(திருப்புக

38. அ) நிலையான நிலவரித்திட்டம் ஜமீன்தார்களிடமிருந்து நீதித்துறைப் பணிகளை திரும்பப் பெற்றது
ஆ) இரயத்துவாரி முறையின்கீழ் குடியானவர்க்கும் அரசுக்கும் இடையே ஜமீன்தாரர்கள் போன்ற இடைத்தரகர்கள் இருந்தார்கள்.
இ) 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய கைத்தொழில்கள் நசியத் தொடங்கின
ஈ) இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழில்புரட்சி இந்திய கைத்தொழில்களை ஊக்குவித்தது

39. அ) வடஇந்தியாவின் அரசியலில் பாளையக்காரர்கள் வலிமைபெற்று விளங்கினார்.
ஆ) யூசுபகான் கான்சாகிப் என்றும் அழைக்கப்பட்டார்.
இ) சிவசுப்பிரமணியப்பிள்ளை மருதுபாண்டியரின் அமைச்சர்.
ஈ) தென்னிந்திய கூட்டிணைவு ஊமைத்துரையின் தலைமையில் அமைக்கப்பட்டது.

40. அ) விக்டோரியா மகாராணியின் அறிக்கையை கானிங்பிரபு அலகாபாத்தில் அறிவித்தார்
ஆ) மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் ஆளுநரான மார்லி பிரபுவையும் இந்திய செயலர் மின்டோ பிரபுவையும் குறிக்கிறது
இ) 1819-ஆம் ஆண்டு சட்டம் இரட்டையாட்சியை மத்தியில் அறிமுகப்படுத்தியது
ஈ) மத்தியில் ஓர் அவை கொண்ட சட்டமன்றம் நிறுவப்பட்டது

V. கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரி, எது தவறு என்பதனைக் குறிப்பிடுக.

41. மங்களூர் உடன்படிக்கை ஆங்கிலேயரின் பலவீனத்தை வெளிப்படுத்தியது
42. வில்லியம் பெண்டிங் பிரபு கல்கத்தா மருத்துவக் கல்லூரியை நிறுவினார்
43. இந்திய வணிகநலன்களுக்கு ஏற்றவாறு கிழக்கிந்திய வணிகக்குழு தனது சுங்கவரிக் கொள்கைகளை மாற்றியமைத்தது
44. லிட்டன் பிரபுவின் ஆட்சி, இந்தியாவில் தேசியம் தோன்ற வழிவகுத்தது.
45. நீதிக்கட்சி ஆட்சி 13 ஆண்டுகள் நீடித்தது.

## பகுதி – ஆ

VI குறிப்புகள் (i) ஏதேனும் 15 வினாக்களுக்கு மட்டும் சிறுகுறிப்பு வரைக. 15 × 3=45
(ii) ஒவ்வொன்றிற்கும் மூன்று குறிப்புகள் அளித்தல் வேண்டும்.

46. பிட் இந்திய சட்டம் 47. காரன்வாலிஸ் பிரபுவின் காவல்துறை சீர்திருத்தங்கள் 48. பசீன் உடன்படிக்கை
49. கூர்க்கா போர் 50 இரஞ்சித் சிங் 51. டல்ஹவுசியின் அஞ்சல் துறை சீர்திருத்தங்கள்
52. இரயத்துவாரி முறை 53. வெள்ளை சிசுக்கொலை 54. பாளையக்காரர் முறை 55. சர் ஜான் கிராடக்
56. மங்கள் பாண்டே 57. இல்பர்ட் மசோதா சர்ச்சை 58. சுவாமி விவேகானந்தா
59. இந்திய தேசிய காங்கிரஸ் 60. வங்கப்பிரிவினை 61. தண்டி யாத்திரை 62. சுப்பிரமணிய பாரதி
63. இட ஒதுக்கீட்டு அரசு ஆணை 64. பேரரசியின் அறிக்கை 65. பசுமைப் புரட்சி

## பகுதி – இ

10 × 6=60

VII குறிப்புகள் (i) பின்வருவனவற்றுள் ஏதேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடை தருக. அவற்றில் வினா எண் 77 க்கு கட்டாயமாக விடையளித்தல் வேண்டும்.
(ii) ஒவ்வொரு வினாவிற்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

66. அ) ஒழுங்குமுறை சட்டத்தின் முக்கிய விதிமுறைகள் பற்றி விவாதிக்க. (அல்லது)
ஆ) மூன்றாம் மைசூர் போருக்கான காரணங்களை விவாதிக்க.

67. அ) துணைப்படைத் திட்டத்தின் முக்கியக் கூறுகளை குறிப்பிடுக. (அல்லது)
ஆ) பிண்டாரிகளை ஒழிக்க ஹேஸ்டிங்ஸ் பிரபு மேற்கொண்ட நடவடிக்கைகளை விவாதிக்க

68. அ) மராட்டிய கூட்டிணைவின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் குறிப்பிடுக. (அல்லது)
ஆ) 1833-ம் ஆண்டு பட்டயச் சட்டத்தின் முக்கிய பிரிவுகளை விவாதிக்க.

69. அ) டல்ஹவுசி பிரபு அயோத்தியை இணைத்ததை விவாதிக்க. (அல்லது)
ஆ) நிலையான நிலவரித்திட்டத்தின் சிறப்புக்கூறுகளை குறிப்பிடுக.

70. அ) வாரிசு இழப்புக் கொள்கையின் கருத்து மற்றும் நடைமுறைகளை எழுதுக. (அல்லது)
ஆ) சார்லஸ் உட் அறிக்கை பற்றி குறிப்பிடுக.

71. அ) 1801-ம் ஆண்டு தென்னிந்திய கலகத்தை பற்றி ஒரு குறிப்பு வரைக. (அல்லது)
ஆ) வேலூர் கலகத்தின் போக்கினை விவரி.

72. அ) 1857-ஆம் ஆண்டு கலகத்தின் விளைவுகளை ஆய்க. (அல்லது)
ஆ) உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்க.

73. அ) லிட்டன்பிரபுவின் பஞ்ச நிவாரணக் கொள்கைப் பற்றி குறிப்பு எழுதுக. (அல்லது)
ஆ) இராமலிங்க அடிகளின் கொள்கைகளை விவரி.

74. அ) சமூக நீதிக்காக பெரியார் ஈ.வெ.ரா. ஆற்றிய பங்கினை மதிப்பிடுக. (அல்லது)
ஆ) மிதவாதிகளின் கோரிக்கைகள் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

75. அ) சுதேசி இயக்கத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துக. (அல்லது)
ஆ) ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துக.

76. அ) நீதிகட்சியின் கல்விச் சீர்திருத்தங்களை விவரி. (அல்லது)
ஆ) 1858-ஆம் ஆண்டு இந்திய அரசுச்சட்டத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.

77. அ) இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளைப் பற்றி விவாதி. (அல்லது)
ஆ) இந்திய அயலுறவுக் கொள்கையின் முக்கிய கூறுகளைக் குறிப்பிடுக.

## பகுதி – ஈ

5 × 10=50

VIII குறிப்பு: (i) ஏதேனும் 5 வினாக்களுக்கு விடை தருக. அவற்றில் வினா எண் 84 க்கு கட்டாயமாக விடையளித்தல் வேண்டும்.
(ii) ஒவ்வொரு வினாவிற்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

78. அ) வாரன்ஹேஸ்டிங்ஸ் சீர்திருத்தங்களை தொகுத்துக் கூறுக. (அல்லது)
ஆ) காரன்வாலிஸ் பிரபுவின் சீர்திருத்தங்களை மதிப்பிடுக.

79. அ) வெண்டிங் பிரபு சமூக சீர்திருத்தங்கள் காலத்தை தொடங்கிவைத்தார் - கருத்துக் கூறுக. (அல்லது)
ஆ) டல்ஹௌசி பிரபுவின் நாடிணைப்புக் கொள்கையை ஆய்க.

80. அ) இந்திய கைத்தொழில்கள் அழிவதற்கான காரணங்களை ஆய்க. (அல்லது)
ஆ) மகளிர் விடுதலைக்காக இயற்றப்பட்ட சமூக சட்டங்களை தொகுத்து எழுதுக.

81. அ) பிரிட்டிஷாருக்கு எதிராக கட்டபொம்மன் மேற்கொண்ட வீரப்போராட்டத்தை மதிப்பிடுக (அல்லது)
ஆ) 1857-ஆம் ஆண்டு கலகத்துக்கான காரணங்களை ஆய்க.

82. அ) இராஜாராம் மோகன்ராய் இந்திய மறுமலர்ச்சியின் தந்தை - வாதிடுக. (அல்லது)
ஆ) இந்தியாவில் தேசியம் தோன்றுவதற்கான காரணங்களை ஆய்க.

83. அ) விடுதலை இயக்கத்தில் தமிழ்நாட்டின் பங்கினை ஆய்க. (அல்லது)
ஆ) ஜவகர்லால் நேரு நவீன இந்தியாவின் சிற்பி என கருதப்படுகிறார் - கருத்துக் கூறுக.

84. அ) (i) இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும் :
அ) மைசூர் ஆ) ஹைதராபாத் இ) சதாரா ஈ) ஜான்சி உ) டெல்லி
ii) டல்ஹவுசி பிரபுவின் கீழ் இருந்த ஆங்கிலப் பேரரசினை வரைக. (அல்லது)
ஆ) 1885 முதல் 1915 வரை நடைபெற்ற இந்திய விடுதலைப் போர் நிகழ்ச்சிகளில் ஐந்தினை காலக்கோடு காட்டி வரைக. (அல்லது)
இ) 1920 முதல் 1950 வரை நடைபெற்ற இந்திய விடுதலைப்போர் நிகழ்ச்சிகளில் ஐந்தினை காலக்கோடு காட்டி வரைக.

———